1994 மார்ச் 18]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் முகவர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொண்டு பணம் திரட்டி தருவார்களேயானால் ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சதவீதம் அவர்களுக்கு ஊக்கத் தொகை தருகிறோம். அதை அவர்களே செலவு செய்தாலும் செய்யலாம். அவர்களுடைய தொகுதிக்கே செலவு செய்தாலும் செய்யலாம். ஆனால் பொதுவாக ஒவ்வொரு மாவட்டமும் திரட்டித் தருகின்ற தொகையிலேயிருந்து அவர்கள் திரட்டித் தருகின்ற பர்சன்டேஜ் அதனுடைய அளவு எவ்வளவு என்று கருதி அவர்களுக்கு ஊக்கத் தொகை தருகிறோம். சாதாரணமாக இலக்கை நிறைவேற்றித் தருவார்களேயானால் சென்னை போன்ற பெரு நகர்களுக்கு 75 இலட்சம் ரூபாய் மாவட்டத்திற்கு என்று ஊக்கத் தொகையாகத் தருகிறோம். இப்படி 10 லட்சம் ரூபாயிலிருந்து 75 லட்சம் ரூபாய் வரையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஊக்கத் தொகைகள் தரப்படுகின்றன. அந்த ஊக்கத் தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தந்த மாவட்டத்தினுடைய பொது நன்மைகள் கருதி பொதுமக்களுக்கு எந்தெந்த இன்றியமையாப் பணிகள் தேவைப்படுகின்றன என்று கருதுகிறார்களோ அதை மாவட்ட ஆட்சித் தலைவர்களே அந்தந்த மாவட்டத்திலே செலவழிக்க முழு உரிமையும் தரப்பட்டிருக்கிறது. அதற்காக அரசையோ, அல்லது அரசுத்துறை நிதிச் செயலாளரையோ, அல்லது நிதி அமைச்சருடைய அனுமதி பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்ற அவசியமும் இல்லை. அந்தந்த மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரே செய்யலாம். அப்படிக் கோயம்புத்தூர் மாவட்டம் போன்றவைகளுக்கு ரூ. 40 லட்சம், ரூ. 45 லட்சம், ரூ. 50 லட்சம் என்று ஊக்கத் தொகை தரப்பட்டு வருகிறது. சென்னைக்கு ரூ. 75 லட்சம் ஊக்கத்தொகை தரப்பட்டு வருகிறது. வேறு சில மாவட்டங்களுக்கு 20 லட்சம், 25 லட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறது. அதை அந்த மாவட்டங்களின் நலன் கருதி, மேம்பாடு கருதி எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திட்டமிட்டுச் செலவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

22—

திருவையாற்றில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுதல்.

* 11088— திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றம், முன்சீப் கோர்ட்டு, இரண்டிற்கும் ஒரே இடத்தில் கட்டிடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1994 மார்ச் 18

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி சட்ட அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றம் மற்றும் முன்சீப் கோர்ட் இரண்டிற்கும் ஒரே இடத்தில் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாற்றில உள்ள குற்றவியல் நீதிமன்றம், முன்சீப் கோர்ட் இரண்டிற்கும் இடைவெளி தூரம் அதிகமாக இருப்பதால், ஒரே இடத்தில் இரண்டுக்கும் கட்டிடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு முடிவெடுத்து, முன்சிப் கோர்ட் மற்றும் ஜுடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் இரண்டையும் கம்பைன்டு கோர்ட் பில்டிங் - ஆக ஆக்குவதற்காக 75 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்குத் தேவைப்பட்ட நிலத்தையும் கையகப்படுத்தி இருக்கிறது. இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கு அந்தச் செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறது. அததோடு மத்திய அரசின் நிதியிலும் அதைச் செய்யலாம் என்றும் அரசு ஒரு கருத்து கொண்டிருக்கிற காரணத்தாலே, மத்திய அரசு, உயர்நீதிமன்றம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் பதில் வந்தவுடன் திருவையாற்றில் கம்பைன்டு கோர்ட் பில்டிங் 75 லட்சம் ரூபாயில் கட்டப்படும்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவையாற்றில் உள்ள குற்றவியல் நீதிமன்றத்தையும் முன்சீப் கோர்ட்டையும் ஆக இரண்டையும் ஒன்றாக ஒரே இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு நமது இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். நீண்ட காலமாக குற்றவியல் நீதிமன்றம், ஒரு சிறிய குறுகிய வட்டத்தில் இருப்பதால், அங்கே நீதிமன்றத்திற்கு வருகின்றவர்கள் அந்த இடத்திலே நிற்க முடியாமல், போக்குவரத்து சாலையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது அங்கு இருக்கிற நீதிபதிகள் அந்தக் குற்றவாளிகளைக் கூப்பிடுகின்றபோது, அவர்கள் தெரியாத நிலை ஏற்படுகிறபொழுது, அவர்கள் வருவதற்குத் தாமதமாகிற காரணத்தினால், அந்த நீதிபதி** வாரண்ட் அல்லது ** தீர்ப்பு என்று கூறிவிடுகிறார் உடனே. ஆகவே, மறுபடியும் கோர்ட்டுக்குச் சென்று, அதற்கு வேண்டிடிய காரியங்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. அதேபோல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1994 மார்ச் 18]

முன்சீப் கோர்ட்டுக்கும் இந்த குற்றவியல் நீதிமன்றத்திற்கும் $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இங்கு இருந்து வருகின்ற அந்தக் குற்றவாளிகளுக்கும் அந்த முன்சீப் கோர்ட்டிலே வாய்தா வந்துவிடுகிறது. இங்கே வருவதற்கும், அங்கே போவதற்கும் சிரமம் ஏற்படுகிறது. அதேநேரத்தில் அமைச்சர் அவர்கள் நிலம் கையப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மைதான். வெகு சீக்கிரத்தில், கூடிய விரைவில் அதற்கு நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் தெரிவித்த ** என்கிற ஒரு வார்த்தை நீக்கப்படுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு, முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் வருகிற 3 ஆண்டுகளில் அதாவது எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளாக 83 கோடி ரூபாய் அளவில் தமிழ் நாட்டிலே இருக்கின்ற எல்லா நீதிமன்றங்களுக்கும் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று அவர்கள் சொல்ல, அதனை மத்திய அரசு ஆராய்ந்து விரைவில் நல்ல முடிவை அறிவிக்க இருக்கிறது. அப்போது திருவையாற்றில் காணப்படுகின்ற அந்தக் குறைகள் எல்லாம்போக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசாராமன்.

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 71 இலட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு இருப்பதாக இங்கே அமைச்சர் பதில் சொன்னார். டெண்டா விடப்பட்டுவிட்டதா என அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், வழக்கறிஞர்களுக்காக தனிக் கட்டிடம் கட்டுவதற்கு இந்த மதிப்பீட்டிலே இடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, $75\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் என்பது குறிப்பு, அதாவது மதிப்பீடு, புரபோசல் என்று நான்சொன்னேன். அந்த புரபோசலை உயர்நீதிமன்றமும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மத்திய அரசாங்கமும் அங்கீரித்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த நடவடிக்கைகள் எல்லாம் உரியவாறு சட்டப்பூர்வமாக எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 23, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு உணவு அமைச்சர்.

23—

தமிழகத்தில் கூடுதல் நவீன அரிசி ஆலைகள் அமைத்தல்.

*16454—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரிசியாக்குவதற்கு இந்திய உணவுக் கழகம் உதவ வேண்டும் என்று தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் மேலும் நவீன அரிசி ஆலைகளை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தமிழகத்தில் மேலும் புதிய நவீன அரிசி ஆலைகளை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும் மாநில அரசும் இந்த நிதி ஆண்டில் அதிக அளவிலே நல்ல தரமான நெல்லைக் கொள்முதல் செய்து, அந்த நெல்லை அரிசியாக்குகின்ற வகையில் போதிய நவீன அரிசி ஆலைகள் இல்லாத காரணத்தினால் அதனை தனியார்களிடம் கொடுத்து, அவர்கள் தரக் குறைவான நெல்லைப் பயன்படுத்தி—தரம் உள்ள அரிசிகளை வெளி மார்க்கெட்டில் விற்றுவிட்டு, தரக் குறைவான அரிசியை பொது மக்களுக்கு விநியோகம செய்கின்ற ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தினால், அதிக அளவிலே தரமான நெல்லை கொள்முதல் செய்து தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்